செய்தி வெளியீடு எண்:552 நாள்: 24.08.2017

<u>செய்தி வெளியீடு</u>

மனித வாழ்நாள் தொடர்ந்து தமிழ்நாட்டில் உயர்ந்து வருகின்ற காரணத்தினால் முதியோர் பராமரிப்புக்கு சிறப்பு கவனம் செலுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளது. இந்தியாவில் தற்போது அறுபது வயதிற்கு மேற்பட்ட முதியோர் அதிகமாக உள்ளனர். முதியோர்களின் விகிதாச்சாரம் 2001–ல் 7.7 சதவீதமாக இருந்து, படிப்படியாக உயர்ந்து தற்போது 8.94 சதவீதமாக உள்ளது. வயது முதிர்ந்தவர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும், அவர்களின் உடல் நலம், பொருளாதாரம், சமூக நலத் தேவையை மேம்படுத்தவும் மற்றும் மறுவாழ்வு சேவை எல்லா வகையிலும் அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்பதை உணர்ந்த மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, சென்னை கிண்டி கிங் நோய் தடுப்பு மருந்து மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் 126 கோடியே 87 இலட்சம் ரூபாய் செலவில் தேசிய மூப்பியல் நிலையம் அமைத்து வருகிறது. இதற்கான கட்டட பணிகள் முடியும் தருவாயில் உள்ளது.

இது மட்டுமன்றி, அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் மூப்பியல் பிரிவு தொடங்க முடிவு செய்யப்பட்டு, முதல் கட்டமாக மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சட்டமன்ற பேரவையில், விதி எண்.110–ன் கீழ் 1.9.2016 அன்று அறிவித்ததற்கிணங்க, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, திருச்சி மற்றும் சேலம் ஆகிய ஐந்து அரசு மருத்துவமனைகளில் தலா 36.58 இலட்சம் செலவிலும், வேலூர், விழுப்புரம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய மூன்று மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் தலா 43.30 இலட்சம் செலவிலும், மூப்பியல் பிரிவு தொடங்கப்பட்டுள்ளது.

இது தவிர, எஞ்சிய 23 மாவட்டங்களிலுள்ள 10 மருத்துவக் கல்லூரி மருத்துமனைகளிலும், 13 மாவட்ட தலைமை மருத்துவமனைகளிலும், மூப்பியல் பிரிவு ரூ.554.70 இலட்சம் செலவில் ஏற்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் திரு எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் ஒப்புதல் வழங்கியுள்ளார்கள். இதன்படி, 23 அரசு மருத்துவமனைகளில் மூப்பியல் பிரிவு ஏற்படுத்தப்பட்டு ஒவ்வொரு மூப்பியல் பிரிவிலும் ஒரு மருத்துவ ஆலோசகர், ஆறு செவிலியர்கள், ஒரு இயன்முறை சிகிச்சையாளர், இரண்டு மருத்துவமனை உதவியாளர்கள் மற்றும் இரண்டு துப்புரவு பணியாளர்கள் நியமனம் செய்யப்படுவார்கள்.

இதனால், மாநிலத்தில் அனைத்து பகுதிகளிலும் உள்ள முதியவர்கள் உயரிய மருத்துவச் சிகிச்சைகள் பெற வசதிகள் ஏற்படுத்தப்படும்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**